R4784

## OTHER SHEEP NOT OF THIS FOLD

# இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகள்

"இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகள் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும்; அவைகள் என் சத்தத்துக்கு செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும்."-யோவான் 10:16

சுவிசேஷ யுகத்தில் கர்த்தர் தம்மை பின்பற்றுகிற ஒரே சபையை, ஒரே மந்தையை பெற்றிருக்கிறார். "என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது, நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்கு பின் செல்லுகிறது." (யோவான் 10:27) ஆரம்பத்திலிருந்தே சீஷத்துவத்தின் நிபந்தனைகளிலோ அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வெகுமதியிலோ எந்தவித மாற்றமுமில்லை. "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்." (எபேசியர் 4:4)

"வேற ஆடுகள்" என்பது மற்ற ஆடுகளை குறிக்கின்றது. சுவிசேஷ யுகத்திற்கு பிறகு வேறு அழைப்பின் கீழ் வேறு நிபந்தனைகளின் கீழாக அழைக்கப்பட்டு கர்த்தரின் சீஷர்களாகிறவர்கள். தற்கால மந்தை பூமிக்குரிய சுபாவத்தை பலியிட்டு, நமது ஆண்டவர் மற்றும் மேய்ப்பரின் தெய்வீக சுபாவத்திற்கு பங்கு பெறுகிறவர்கள். (ரோமர் 12:1,2; 2தீமோ. 2:11,12; 2பேது. 1:3,4) எதிர்கால கர்த்தரின் மந்தை, பலி மற்றும் சுபாவ மாறுதலுக்கு அழைக்கப்படவில்லை. மாறாக, ஏதேனில் பாவத்தின் மூலம் இழந்ததும் கல்வாரியில் மீட்கப்பட்டதுமான சிந்தை, சரீரம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றின் பூரணத்தை, மானிட சுபாவத்தை படிப்படியாக கீழ்ப்படிதலின் மூலம் அடையும் சலுகையை பெறுவார்கள். இவைகள் தற்கால மந்தையல்ல. ஏனெனில் அவர்கள் தெய்வீக சுபாவத்திற்கோ ஒரு பரலோக வாசஸ்தலத்திற்கோ அழைக்கப்படவில்லை. மாறாக, மேசியாவின் ஆளுகையில் திரும்பப்பெறப்போகிற பரதீசுக்கும் பூமிக்குரிய சுபாவத்திற்கும் அழைக்கப்படுவார்கள்.

### "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடுகூட மகிமையில் வெளிப்படுவீர்கள்"

இந்த வேறே ஆடுகளைப் பற்றி நமது ஆண்டவர் மத்தேயு 25: 31-46இல் குறிப்பிடுகிறார். இந்த "செம்மறி ஆடு, வெள்ளாடு" உவமை சுவிசேஷ யூகமாகிய இந்த யுகத்திற்கு உரியது அல்ல, வரவிருக்க யுகமாகிய மேசியாவின் ஆளுகையின் யுகத்திற்குரியது. இந்த உவமையின் முன்னுரையில் (வசனம் 31,32) "மனுஷ குமாரன் தமது மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடும் கூட வரும் போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாக சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களைப் பிரிப்பார்."

இரட்சகர் இன்னும் மகிமையில் பிரவேசிக்கவில்லை. லூாக்குத்தத்தமாவது: "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது நீங்களும் (இந்த யுகத்தின் ஆடுகள், சபை) அவரோடு கூட மகிமையில் வெளிப்படுவீர்கள்." (கொலோசெயர் 3:4) சுவிசேஷ யுகத்தின் ஜெயங்கொண்ட ஆடுகள், மாபெரும் மேய்ப்பரின் ஆளுகையில் உலகின் மனுக்குலத்தோடு தொடர்பு கொள்ளும் வேலையில் இணைந்திருப்பார்கள். பிறகு மனுக்குலம் அனைத்திற்கும் ஒரு சோதனை அல்லது தீர்ப்பு வரும். அது யார் செம்மறியாட்டைப் போன்ற குணலட்சணத்தையும் யார் வெள்ளாட்டைப் போன்ற குணலட்சணத்தையும் அபிவிருத்தி செய்வார்கள் என்பதைப் பற்றியதாகும்.

### மேசியாவின் ஆளுகையில் ஆடுகளை பிரிக்கும் வேலை நடைபெறும்

ஆயிரம் வருட யுகத்தில் கீழ்ப்படிதலின் ஆவியை அபிவிருத்தி செய்கிறவர்கள் செம்மறியாட்டு மந்தையில் சேர்க்கப்பட்டு சரியான கிருபைக்கும் நித்திய ஜீவனுக்கும் பாத்திரராக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். அந்த யுக முடிவில், "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்ற அவரது வார்த்தைகளைக் கேட்பார்கள். (வசனம் 34)

அந்த மகிமையான காலத்தின் சாதகமான நிலைமைகளின் கீழும் மாறான ஆவியை உடையவர்கள், சாந்தம், நற்குணம், அன்பு போன்ற கர்த்தரின் ஆட்டின் குணலட்சணங்களை அபிவிருத்தி செய்ய தவறியவர்கள் நித்திய ஜீவனுக்கு அபாத்திரர் என்றும் கர்த்தரின் ஆடாக கருதப்பட தகுதியற்றவர்கள் என்றும் கருதப்படுவார்கள். அந்த சமயத்தில் அவரது இடது பக்கத்தில் உள்ள அவரது வெறுப்பின் இடத்தை எடுத்துக்கொள்ளுவார்கள். பிறகு அவர்கள் நீக்கப்படுவார்கள். செம்மறியாட்டு வகுப்பார் கர்த்தரின் கிருபையில் நிலைத்திருந்து நித்திய ஜீவன் பரிபூரணமாக அளிக்கப்படும். வெள்ளாட்டு வகுப்பார் நித்திய ஜீவனுக்கு தகுதியற்றவர்களாக கருதப்பட்டு அவரது வெறுப்புக்கு பாத்திரராக நித்திய தண்டனைக்கு அனுப்பப்படுவார்கள்.

எனினும் தண்டனையானது நித்திய ஆக்கினையாக இல்லாமல் நித்திய மரணமாக இருக்கும். ஏனெனில் கர்த்தர் மறுபடியும் தன்னை பலி கொடுக்கமாட்டார். அந்த மகிமையான ஆளுகையில் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளாதவர்களுக்கு மேலும் சந்தர்ப்பம் கொடுக்கப்படமாட்டாது. உவமையில் சொல்லப்பட்டது போல, கர்த்தருக்கு எதிரானவர்கள் வெள்ளாடாக குறிப்பிடப்பட்டது போல, அழிவுக்கு அடையாளமாக அக்கினி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது அந்த வெள்ளாட்டு வகுப்பார் மேல் வரும். அக்கினியானது அழிக்கக்கூடிய ஒன்றாக அறியப்பட்டிருப்பதால் அழிவுக்கு அது சரியானபடி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த உவமையில் வசனம் 46 இவ்விதமாக சரியானபடி வாசிக்கப்பட வேண்டும். "இவர்கள் நித்தியமாக ஜீவனிலிருந்து நீக்கப்படுவார்கள். நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையும்படி போவார்கள்."